SDE one copy

Reg. No. : ..............................

**D 1553** **Q.P. Code : [07 DL 01]**

(For the candidates admitted from 2007 onwards)

B.Lit. DEGREE EXAMINATION, MAY 2013.

First Year

Part III — Tamil

இக்கால இலக்கியம் (கவிதை, உரைநடை)

Time : Three hours Maximum : 100 marks

எவையேனும் ஐந்தனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

($5 \times 20 = 100$)

1. பாரத தேசத்தின் மீதான பற்றுதலைப் பாரதியார் புலப்படுத்தும் திறன் உரைக்க.

2. மீராவின் 'ஊசிகள்' கவிதைகளின் உள்ளடக்கங்களை உணர்த்துக.

3. கு.வெ.பாலசுப்பிரமணியன் உரைநடை வளத்தினை இலக்கிய நிழல் வழிப் புலப்படுத்துக.

4. 'பேராசிரியர் பிரம்மச்சாரி' நாடக மாந்தர் படைப்புத் திறனைப் பகர்க.

5. சூரிய காந்தனின் உறவுச் சிறகுகள் கதைகளின் கருத்து வெளிப்பாடுகளைக் கட்டுரைக்க.

6. 'ஒண்டிக்காரன் பண்ணையம்' புதினக் கட்டமைப்பை விவரிக்க.

7. கதை கூற்று முறையில் சிறுகதையும் புதினமும் ஒத்தும் உறழ்ந்தும் அமையுமாற்றை உரைக்க.

8. தமிழ்க் கவிதை, உரைநடை வளர்ச்சியினை மதிப்பிடுக.

---

Reg. No. : ....................................

**D 1554** **Q.P. Code : [07 DL 02]**

(For the candidates admitted from 2007 onwards)

B.Lit. DEGREE EXAMINATION, MAY 2013.

First Year

Part III — Tamil

பக்தி இலக்கியம்

Time : Three hours Maximum : 100 marks

எவையேனும் ஐந்து வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

(5 × 20 = 100)

1. திருஞானசம்பந்தரின் பத்திமையைத் 'தோடுடைய செவியன்' என்னும் பதிகப் பாடல்கள் வழிப் புலப்படுத்துக.

2. திருநாவுக்கரசர் இறைக்காட்சியை வியந்து போற்றுவது எவ்வாறு?

3. பாவை நோன்பின் சிறப்புக்களைத் திருப்பாவைப் பாசுரங்களின் வழி எடுத்துரைக்க.

4. திருமாலின் இறைப்பெருமையை ஆண்டாள் போற்றும் திறம் உரைக்க.

5. வள்ளலாரின் ஆற்றா விண்ணப்பும் உணர்த்தும் செய்திகளை விளக்குக.

6. குணங்குடி மஸ்தான் பராபரக் கண்ணியில் வேண்டுவன யாவை?

7. எண்வகை மனத்தர் பற்றி ஏசுபிரான் உரைத்த செய்திகளை உரைக்க.

8. 'தமிழ் இலக்கியத்தை மேன்மைப்படுத்துவது பக்தி இலக்கியம்' - இக்கூற்றை மதிப்பிடுக.

---

Reg. No. : ....................................

D 1555

Q.P. Code : [07 DL 03]

(For the candidates admitted from 2007 onwards)

B.Lit. DEGREE EXAMINATION, MAY 2013.

First Year

Part III — Tamil

இலக்கணம் 1– நன்னூல்

Time : Three hours

Maximum : 100 marks

எவையேனும் ஐந்தனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

(5 × 20 = 100)

1. ஆசிரியர், மாணாக்கர் பற்றி நன்னூலார் கூறுவனவற்றை விவரித்தெழுதுக.

2. நன்னூல் வழித் தமிழ் எழுத்துக்களின் வகை, பிறப்புப் பற்றி விளக்கம் செய்க.

3. சாரியைப் புணர்ச்சி பற்றி நன்னூல் கூறும் இலக்கண மரபுகளை எடுத்துக்காட்டுக.

4. பெயர், வினைச் சொற்களின் இலக்கணக் கூறுகளை ஒப்பிட்டுரைக்க.

5. தமிழ்த் தொகை நிலைத் தொடர்களை வகைப்படுத்தி விளக்குக.

6. இடைச்சொற்கள் பொருளுணர்த்துமாற்றை நன்னூல் வழி விளக்குக.

7. உவமை, உருவகம் அணிகளின் விளக்கம், வகைகள் சான்றுகள் தருக.

8. பின்வரு நிலையணி, தற்குறிப்பணி என்பனவற்றைச் சான்றுகள் காட்டி விளக்குக.

---

**Reg. No. : ....................................**

**D 1556** **Q.P. Code : [07 DL 04]**

(For the candidates admitted from 2007 onwards)

B.Lit. DEGREE EXAMINATION, MAY 2013.

First Year

Part III — Tamil

காப்பியங்கள்

Time : Three hours Maximum : 100 marks

எவையேனும் ஐந்து வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

(5 × 20 = 100)

1. சிலப்பதிகார அந்திமாலை சிறப்புச் செய்காதையின் செய்திகளை விளக்கி வரைக.

2. மணிமேகலையில் மலர்வனம் புக்க காதை பெறும் இடமும் சிறப்பும் உரைக்க.

3. இளங்கோவடிகள், சீத்தலைச் சாத்தனார் இருவரின் வருணனைத் திறன்களை எடுத்துரைக்க.

4. கம்பர் கைகேயியின் பண்பினைப் படைத்துக்காட்டும் திறம் உரைக்க.

5. இளையான்குடி மாறன் நாயனாரின் பக்தித் திறத்தைச் சேக்கிழார் போற்றும் திறம் உணர்த்துக.

6. சுரமஞ்சியாரைச் சீவகன் மணம் கொண்ட வகையினைத் திருத்தக்க தேவர் வழிக் கட்டுரைக்க.

7. பெருங்கதை ஆசிரியரின் கதை கூறு திறனைக் கட்டுரையாக்குக.

8. தமிழ்க் காப்பியங்களின் கட்டமைப்பினை விளக்கி வரைக.

---

Reg. No. : ....................................

**D 1557** **Q.P. Code : [07 DL 05]**

(For the candidates admitted from 2007 onwards)

B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2013.

First Year

Part III–Tamil

தமிழக வரலாறும் மக்களும் பண்பாடும்

Time : Three hours Maximum : 100 marks

எவையேனும் ஐந்தனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

(5 × 20 = 100)

1. தமிழகத்தின் அமைப்பும் இயற்றை வளச் சிறப்பும் குறித்துக் கட்டுரை வரைக.

2. தமிழ் மொழி, மக்கள் பற்றிச், சிந்துவெளி அகழ்வாராய்ச்சி வெளிப்படுத்தும் செய்திகளைக் கட்டுரைக்க.

3. சங்க இலக்கயம் புலப்படுத்தும் பண்டைத் தமிழரின் அக, புற வாழ்வியலை எடுத்துரைக்க.

4. களப்பிரர் பற்றியும் அவர் காலத் தமிழ் இலக்கிய ஆக்கங்கள் பற்றியும் எழுதுக.

5. சோழர் காலத் தமிழகத்தில் கலை, இலக்கிய வளர்ச்சி பற்றிப் கட்டுரை வழங்குக.

6. தமிழக வரலாற்றில் பாண்டியரின் எழுச்சியும் வீழ்ச்சியும் குறித்து எழுதுக.

7. ஐரோப்பியர் வருகைக்குப் பின்னான தமிழ் இலக்கிய, கலை வளர்ச்சி பற்றி மதிப்பிடுக.

8. விடுதலைப் போராட்டத்தில் தமிழர்தம் பங்களிப்புப் பற்றிக் கட்டுரை வரைக.

---